Date : 27.07.2026.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )

விழுப்புரம்.

E.P.No.126/2023 in ARC 1107/2021

ம.சா.1

பெயர் : திரு. அருள்ராஜ்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு உதவியாளர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**<u>எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை ..</u>**

1. 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் வாங்குவதற்காக கடன் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். 1-ம் எதிர்மனுதாரர் எப்போது எவ்வளவு தொகை கடனாக வாங்கியுள்ளார் என்றால் ரூ. 6,80,000/- ம், 31.03.2018 தேதியில் வாங்கியுள்ளார். எத்தனை மாத தவனையில் கடன் கொடுத்தோம் என்றால் ஞாபகம் இல்லை. தவனை தொகை எவ்வளவு என்றால் ஞாபகம் இல்லை. கடைசியாக தவனை தொகை எப்போது கட்டாமல் விடப்பட்டது என்றால் கணக்குகளை பார்த்தால்தான் தெரியும். 1-ம் எதிர்மனுதாரர் ஒரு தவனை கடன் தொகை செலுத்தாததால் மனுதாரர் நிறுவனம் வாகனத்தின் மீது நடவடிக்கை எடுக்கக்கூடாது என்று சென்னை சிட்டி சிவில் நீதிமன்றத்தில் 1-ம் எதிர்மனுதாரர் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. 2019-ல் மனு தாக்கல் செய்துள்ளார் என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகும் வாகனத்தின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதால் 2019-ல் வண்டியின் உரிமம் டிசம்பர் மாதம், கடலூர் RTO அலுவலகத்தில் 1-ம் எதிர்மனுதாரர் ஒப்படைத்துவிட்டார் என்றால் தெரியாது.

2. வண்டியை நாங்கள் பரிமுதல் செய்து ஏலம் விடப்பட்டது என்றால் சரியல்ல. ஏலம் சம்மந்தமாக 1-ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு கொடுக்கவில்லை என்றால் வண்டியை நாங்கள் பரிமுதல் செய்யவில்லை. நிறைவேற்று மனுவில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் 1-ம் எதிர்மனுதாரரை கைது செய்ய வேண்டும் என கோரி நிறைவேற்று மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிறைவேற்று மனு தொகை

எவ்வளவு என்றால் ரூ.1600000/-ம். 1-ம் எதிர்மனுதாரர் கடன் தொகை எவ்வளவு கட்டியுள்ளார் என்றால் ரூ.3,26,000/-ம். கடன் தொகையில் பாதிக்கு மேல் செலுத்தியுள்ளார் என்றும், எங்கள் நிறுவனத்தில் வட்டிக்கு மேல் வட்டி போட்டுள்ளீர்கள் என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**